**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.41/2015**

தேதி . 26.04.2021

பெயர் . கிருஷ்ணப்ப முதலி

த/பெ . மாயாண்டி முதலி

வயது . 50

வா.சா. 1

**குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்தின் பட்டா 1ம் பிரதிவாதியின் தாத்தா நாராயணசாமி பெயர் உள்ளது என்று பிராதிலும் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் 123/2, பட்டா எண் 271, முழு விஸ்திரணம் 1-37 என்றால் சரிதான் மேற்படி கணினி பட்டாவை பி.த.சா.ஆ1 குறியிடப்படுகிறது. வழக்கு சொத்து செங்குத முதலிக்கு சொந்தமானது என்பதை காட்ட பட்டா, சிட்டா, அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் செங்குத முதலியின் பூர்வீக சொத்து. பூர்வீக சொத்து என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை 2009ம் வருடத்திலிருந்து ஒவ்வொரு பகுதியாக விற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்காகன கணினி வில்லங்க சானிறதழ் சான்றிட்ட நகலை பி.த.சா.ஆ.2க குறயிடப்படுகிறது. பி.த.சா.ஆ.2ல் வழக்கு சொத்தை வீடு மனையாக விற்ற விவரம் உள்ளது என்றால் சரிதான். 7.1. 2010ல் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தின் 2 ஏக்கரை தான பத்திரம் மூலம் புச்சிரெட்டிபள்ளி அரசு பள்ளிக்கு எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த பதிவு செய்யப்பட்ட தான பத்திரத்தில் 2ம் வாதி ஆறுமுகம் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். 19.11.2011ல் 1ம் பிரதிவாதி துர்வாசல் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார் அந்த கிரைய பத்திரலும் 2ம் வாதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கொடுத்த கிரையம் மற்றும் தான பத்திரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வழக்கு சொத்து கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான். தான மற்றும் கிரைய பத்திர மூலம் வாங்கியவர்கள் தான் அனுபவத்தில் இதுவரை இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 2014ல் வள்ளியம்மாள், வெங்கடேசன் என்பவருக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கிரையம் கொடுத்தார் அந்த கிரைய பத்திரத்தில் 1ம் வாதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். எனக்கும் மற்ற வாதிகளுக்கும் உரிமை இல்லாத சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்தது செல்லாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் இந்த வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. எனக்கும் மற்ற வாதிகளுக்கும் உரிமை இல்லாத சொத்திற்கு உறுத்து கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்தது செல்லாது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**